திருச்சிற்றம்பலம்

# 30ம் திருமுறை மாநாடு’ 2010




நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே

## ஓதும்போட்டிப் பாடல்கள்

பண்ணின் மொழி சொல்ல விண்ணும் நமதாமே

<u>வெளியீடு:</u>

## திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

"திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்"

(ஒலி வட்டு இணைக்கப்பட்டுள்ளது)

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R1, R2 & R3

(02-01-2004 க்கும் 01-01-2007 க்கும் இடையே பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

## 1. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண் – தக்கராகம் தாளம் – ரூபகம்**

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே.

## 2. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண் : இந்தளம் தாளம் – ஆதி**

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.

## 3. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

**பண் : சாதாரி தாளம் – ரூபகம்**

தலையே நீவணங்காய் - தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

**4. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது**

**தனித் திருக்குறுந்தொகை                    தாளம் – ஆதி**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

## பிரிவு R4, R5 & R6

(02-01-2001 க்கும் 01-01-2004 க்கும் இடையே பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

**1. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது**

**பண் : நட்டபாடை                    தாளம் – ரூபகம்**

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே.

**2. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது**

**பண் : காந்தார பஞ்சமம்                    தாளம் – ஆதி**

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

## 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண் : புறநீர்மை** **தாளம் – மிஸ்ரசாப்பு**

வடியுடை மழுவேந்தி
மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப்
புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக்
கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே

## 4. மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

**இராகம்: மோகனம்** **தாளம் – ஆதி**

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

## 5. சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம்

**இராகம்: மத்திமாவதி** **தாளம் – ஆதி**

அண்ணலே எனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக் கயிலையில் இருந்த நின் கோலம்
நண்ணி நான் தொழநயந்து அருள் புரி எனப் பணிந்தார்.

# பிரிவு R7,  R8 & R9

(02-01-1998 க்கும் 01-01-2001 க்கும் இடையே பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

## 1. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண் : பியந்தைக்காந்தாரம்** **தாளம் – ஆதி**

எந்தை ஈசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

## 2. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

**பண் : காந்தாரம்** **தாளம் – ரூபகம்**

பாடிளம் பூதத்தி னானும் பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக் கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே.

## 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண் : பழம் பஞ்சுரம்** **தாளம் – ஆதி**

மருவார் கொன்றை மதிசூடி
  மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
  மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
  தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
  பெரிய பெருமா னடிகளே.

## 4. மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

**இராகம்: மோகனம்** **தாளம் – ஆதி**

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

## 5. சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம்

**இராகம்: மத்திமாவதி** **தாளம் – ஆதி**

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டம்செய் வரதர்பொற் றாள்தொழ

# பிரிவு R10 & R11

(02-01-1994 க்கும் 01-01-1998 க்கும் இடையே பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

## 1. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண் : கௌசிகம்** **தாளம் – ரூபகம்**

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே.

## 2. மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

**இராகம்: மோகனம்** **தாளம் – ஆதி**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

## 3. சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

**இராகம்: ஆனந்தபைரவி** **தாளம் – ஆதி**

மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி எல்லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## 4. திருமூலர் அருளிய திருமந்திரம்

**இராகம்: பெஹாக்** **தாளம் – ஆதி**

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே.

## 5. சேக்கிழார் சுவாமிகள் அருளியது

**இராகம்: மத்திமாவதி** **தாளம் – ஆதி**

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

# பிரிவு R12& R13

(02-01-1994 க்கு முன் பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

1. விரும்பிய ஒரு தேவாரப்பாடல்
   (ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)
2. விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)
3. விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)
4. விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)
5. விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )

**திருச்சிற்றம்பலம்**

**ஒலிப்பேழையில் பாடியவர்:**
சிவதிரு புகழேந்தி மகேஸ்வரன் ஓதுவார்,
ஸ்ரீ ருத்ரகாளியம்மன் ஆலயம், சிங்கப்பூர்.

**ஒலிப்பேழையில் முன்னுரை:**
சிவதிரு கண்ணா கண்ணப்பன்
செயலர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு